www.newwisdomministries.com

# ஞானஒலி






# கொடுப்பவரே மேன்மக்கள்





**தலையங்கம்**

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் – ஞான ஒலி

அன்புமிக்க எனதருமை ஞான ஒலி மின்னிதழின் நலம் விரும்பிகளே, உங்கள் அனைவருக்கும் நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்துவின் அற்புத நாமத்தில் எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பெறுவதற்குக்குரிய முதல் விதி என்னவென்றால், கொடுப்பதுதான். கொடுப்பவருக்கே கொடுக்கப்படும். அதுவும் நன்றாகக் கொடுக்கப்படும். பெற்றுக்கொண்டே இருக்கவேண்டும் என்பவர்கள், உலகிலேயே மிகவும் வறுமையானவர்கள். கொடுக்கும் உள்ளம் கொண்டவர்களே உலகின் ஆகச் சிறந்த செல்வந்தர்கள்.

எதையும் நிறைவாக, அளவில்லாமல் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களுக்கு இயேசு சொல்லிக் கொடுத்த அற்புதமான ராஜ தந்திரம், கொடுங்கள், மனமகிழ்வோடு கொடுங்கள என்பதுதான். கொடுக்கும் கரங்களுடையவர்களின் கூரையை, மன்னிக்கவும், கான்க்ரீட் மேல்தளத்தைத் துளைத்துக் கொண்டு, அவர்கள் விரும்புகின்ற அனைத்தும் வரும். கொடுக்க வேண்டும் என்ற விதியில் நம்பிக்கை கொண்டவர்கள்தான் மிகச் சிறந்த ஞானிகள். அத்தகைய ஞானம் உடையவர்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதம் என்ன என்பதை சாலமோனின் ஞானநூல் அதிகாரம் 7 இறைவசனம் 11 இவ்வாறு கூறுகின்றது.

ஞானத்தோடு எல்லா நலன்களும்
வந்து சேர்ந்தன, அது அளவற்ற
செல்வத்தை ஏந்தி வந்தது......

கொடுப்பதில் உள்ள சந்தோஷத்தையும், மனமகிழ்ச்சியையும் அதை அனுபவித்தவர்களுக்கே புரியும். அதன் அருமை தெரியும். அந்த அனுபவத்தைப் பெற்றவர்கள், தனக்குரிய அனைத்தையுமே, யோசிக்காமல் கொடுப்பார்கள்.

கொடுத்துச் சிவந்த கரங்களைக் கொண்ட கர்ணன் என்ற கதைப் படைப்புதான், கொடுப்பது எவ்வளவு, பெருமைக்குரியது என்று கூறுகின்றது.

இவற்றிக்கெல்லாவற்றையும்விட, திருவிவிலியம் மிக உன்னதமான உண்மை ஒன்றைச் சொல்லுவதை. யோவான் எழுதிய நற்செய்தி, 3ம் அதிகாரம். 16ம் வசனத்தில்

படிப்போம்..

**தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் நிலைவாழ்வு பெறும்பொருட்டு, அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்......**

அறைகுறையாகவும், கணக்குப் பார்த்துக் கொடுப்பது கொடையல்ல. கொடுப்பது முழுமையாகவும், எதிர்பார்பின்றிக் கொடுக்கப்பட வேண்டும். அப்படிக் கொடுக்க வேண்டும் என்பதைத்தான் பரிசுத்தப் பரலோகத் தந்தையின் கொடையுள்ளம் நமக்குக் கற்றுத் தருகிறது. கொடை வள்ளல்களுக்கு பண்மடங்காகத் திரும்பக் கொடுக்கப்டும்.

இயக்குனர் திரு அகத்தியனின் வாழ்வில் நடந்த ஒரு சுவாரஸ்மான சம்பவத்தை இங்கு உங்களோடு பகிர்ந்து கொள்வது, மேற்சொன்ன கொடையுள்ளத்திற்கு என்ன நடக்கும் என்பதை மேலும் விளக்கும். திரைப்படம் எடுக்க அவர் வறுமையோடு சென்னையில் போராடிக் கொண்டிருக்கும்போது. அவரின் தந்தை இறந்துபோனார். அந்த சமயத்தில் ஊருக்குப்போகக்கூட காசில்லாமல், அங்குமிங்கும் அலைந்து 200 ரூபாய் கடன்வாங்கி, ஊருக்குப்போய் தந்தையின் அடக்கச் சடங்கை நிறைவேற்றிவிட்டு வந்தார்.

அதன்பிறகு. அவரின் தந்தைக்கு 16ம் நாள் காரியங்களைச் செய்ய வேண்டிய சூழ்நிலை. கையில் காசு இல்லை. என்ன செய்வது என்ற குழப்பத்தில், தனது முதல் பட இயக்கத்திற்காகத் தயாரித்து வைத்திருந்த கதையை எடுத்துக்கொண்டுபோய், மணிவண்ணன் அவர்களிடம் கொடுத்து, இந்தக் கதையின் முழு உரிமையை உங்களுக்கு எழுதிக் கொடுத்துவிடகின்றேன். அதற்குப் பதிலாக எனக்கு ஆயிரத்து ஐநூறு ரூபாய் கொடுங்கள், எனது தந்தையின் 16ம் நாள் காரியம் செய்ய அது உதவியாக இருக்கும் என்று கூறியிருக்கின்றார். மணிவண்ணன் அதைக் கேட்டுவிட்டு, தன் அறைக்குள் சென்று ரூபாய் 1500ஐ கொண்டுவந்து அகத்தியனிடம் கொடுத்து அப்பாவிற்கான உங்களின் கடமையைச் செய்துவிட்டு வாருங்கள் என்றவர், அவரிடம். அகத்தியன், எந்தக் காரணத்தைக் கொண்டும் உங்களின் கதையை யாருக்கும் கொடுத்துவிடாதீர்கள். காலம் எப்படி மாறும், யாருக்கு என்ன நடக்கும் என்று யாருக்கும் தெரியாது. நாளையே நீங்கள் வெற்றி பெறுவீர்கள்நம்பிக்கையோடு சென்று வாருங்கள் என்றார்.

அதன்பிறகு, அகத்தியன் இயக்கிய ஆறு படங்கள் அவருக்குப் பெரும் புகழையும், செல்வத்தையும் தந்தது. அவரின் அத்தனை படங்களிலும் மணிவண்ணன் அவர்கள் நடித்திருந்தார்கள். ஒரு முறை அகத்தியனின் படப்பிடிப்பில் மணிவண்ணன் அகத்தியனை அழைத்து, நான் அன்று எந்தவித எதிர்பார்ப்பின்றி, உங்களுக்கு 1500 ரூபாய் மட்டுதான் கொடுத்தேன்....ஆனால், இந்த ஆறு படங்களில் நடித்ததன் மூலம் நான் பெற்ற சம்பளம் 75 லட்ச ரூபாய்.


நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் காலம் கவனித்துக் கொண்டுதான் இருக்கின்றது. அதுவும் எதிர்பார்ப்பின்றி செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் தக்க பலனை அளவுக்கதிகமாகவே, நமக்கு இந்தப் பிரபஞ்சம் அள்ளிக் கொடுக்கின்றது என்று சொன்னார். அதைக் கேட்ட அகத்தியன், கண்ணீர் மல்க, மணிவண்ணனின் கரங்களைப் பற்றிக் கொண்டார்.

மணிவண்ணனின் தர்மச் செயலை, மனித நேயத்தை, உலகம் அறிய அகத்தியன் அவர்கள் ஒரு தொலைக்காட்சியின் நேர்காணல் நிகழ்ச்சியின்போது தெரிவித்தார். அதன்மூலம் மற்றவரும் பிறரின் தேவையை உணர்ந்து, உதவி செய்யும் மனப்பக்குவத்தை அனைவரும் பெற்றுக்கொள்ளவே, இப்படிப்பட்ட உதாரண மனிதர்கள் நமக்குக் கற்றுத் தருகின்றார்கள்.

தெய்வம் இருப்பதே, மனிதரின் நல்வாழ்வை உறுதி செய்வதற்காகத்தான். உலகில் எத்தனை கோடானுகோடி மனிதர்கள், படைப்புகள் இருக்கின்றனவோ, அவை அனைத்தையும் பராமரிக்கும் இறைத் தன்மையை நாமும் கடைப்பிடிப்போம். உலகின் ஒளியாய் வாழ்வோம்.

# விவிலியம் அறிவோம்





## இஸ்ரயேலின் தலைவர்கள்
## இணைச் சட்டம் 16:18-18:22)

இஸ்ரயேலை வழிநடத்தும் தலைவர்கள் தரமான, நேர்மையான தலைவர்களாக இருக்கவேண்டும் என்பது ஒரு முக்கிய கரிசனையாக இருந்தது. இணைச்சட்ட ஆசிரியர்கள் இஸ்ரயேலை வழிநடத்தும் தலைவர்கள், குறிப்பாக நீதிஅரசர்கள், அரசர்கள், குருக்கள் மற்றும் இறைவாக்கினர்கள் எப்படியிருக்கவேண்டும் என்பதை இப்பகுதியில் குறிப்பிடுகின்றனர். இஸ்ரயேலின் தலைவர்கள் இணைச்சட்டம் நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ள திருச்சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வாழவேண்டும். அவர்களின்; நிர்வாகம் எடுக்கும் முடிவுகள் இறுதியானவை அல்ல. இஸ்ரயேலின் எல்லாத் தலைவர்களும் திருச்சட்ட மரபுகளுக்குக் கீழ்ப்படிந்துதான் செயல்படவேண்டும். இத்தகைய நடைமுறை தலைவர்களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தி, அதிகாரத்தை மக்களுக்குச் சேவை செய்யும் ஒன்றாக மாற்றுகிறது. கட்டுப்படுத்தப்பட்ட நிர்வாகத்தை இணைச்சட்டம் மேன்மைமிக்கதாகக் கருதுகிறது.

நீதிபதிகளும் அதிகாரிகளும்; முடியாட்சி தொடங்குவதற்குமுன் குலமுதுவர்கள் அல்லது மூப்பர்கள்தான் இஸ்ரயேலின் தலைவர்களாக இருந்தார்கள். மூப்பர்கள்; முக்கியமான குலங்கள் அல்லது குடும்பங்களின் தலைவர்களாகவும் இருந்தார்கள். அதிகாரம் ஒரு தனிப்பட்ட மனிதனிடம் அல்லது ஒரு குழுவிடம் தங்கிவிடாமல் அவர்கள் பார்த்துக்கொண்டார்கள். முடியாட்சி தொடங்கியபின் மூப்பர்களின் செல்வாக்கு குறைந்தது; அவர்கள் செய்துவந்த பணி அரசர்களால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் கைகளுக்கு மாறியது. பண்டைய மேற்காசிய நாடுகளில் நிர்வாகம் சிறப்பாக நடைபெறுகிறது என்பதைக் கணிப்பதற்கு நாட்டில் சட்டங்களும் அவற்றைக் கடைபிடிக்கும் முறைகளும் சிறப்பாக அமையவேண்டும். இதற்காக ஒவ்வொரு அரசும் சட்டம் ஒழுங்கு சம்பந்தமான வழக்குகளை விசாரிப்பதற்காக நீதிபதிகளையும் அதிகாரிகளையும் நியமித்தார்கள். அவர்கள் சாட்சிகளை விசாரித்து, வழக்குகளைப் புலனாய்வுசெய்து, தீர்ப்பு வழங்கினார்கள். ஒரு சில முக்கியமான வழக்குகளை அரசரே நேரில் கேட்டு தீர்ப்பு வழங்கும் பழக்கமும் இருந்தது (காண் 2 சாமு 1:2-4).இச 16:18 இன்படி நீதிபதிகளையும் அதிகாரிகளையும் நியமிப்பதற்கு ஓர் அதிகார மையம் இருந்தது. இந்த அதிகார மையம் யார் அல்லது எத்தகைய அமைப்பைக் கொண்டிருந்தது என்பதை அறிந்துகொள்வது கடினம். விவிலியத்தில் இஸ்ரயேலின் சமூக, அரசியல், நீதித்துறை அமைப்புகள் பற்றிய தெளிவான பதிவுகள் இல்லை. 2 குறிப்பேடு

19:5 இல் கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டில் யூதாவை ஆட்சிசெய்த யோசபாத்து அரசன் நீதிபதிகளை நியமித்தது பதிவுசெய்யப்பட்டுள்ளது. இஸ்ரயேல் சமூகத்தில் நீதிபதிகளின் பணி நீதித்துறையோடு மட்டும் நிற்கவில்லை. நீதிபதிகளாக நியமிக்கப்பட்டவர்கள் உள்ளூர் ஆளுனர்களாக, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மாவட்டங்களின் நிர்வாகப் பணிகளைக் கவனித்து வந்தார்கள் எனலாம். அவர்கள் நிர்வாகிகளாகவும் நீதிபதிகளாகவும் செயல்பட்டார்கள். நீதிபதிகள் நிர்வாகத்தில் கொள்கை முடிவுகளை எடுத்தார்கள்; அதிகாரிகள் அவற்றை மக்களுக்கு அறிமுகப்படுத்திச் செயல்படுத்தினார்கள். அதிகாரிகள் நீதிபதிகளின் உதவியாளர்களாகச் செயல்பட்டார்கள் எனக் கூறலாம்.

பண்டைய காலத்திலும் நீதிபதிகள், அரசு அதிகாரிகள் ஆகியோர் கையூட்டுப் பெறும் வழக்கம் இருந்தது (காண் நீமொ 6:35; மீக்கா 7:3). வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கத்துடன் எதிரெதிர் கட்சிகள் நீதிபதிகளை விலைக்கு வாங்க முயற்சித்தார்கள். அதேவேளையில் கையூட்டுப் பெறுவதை ஒழிப்பதற்கும் முயற்சிகள் செய்யப்பட்டன. உதாரணமாக, அமுராபி விதிகளில் கையூட்டுப் பெற்று தீர்ப்பை மாற்றும் ஒரு நீதிபதி, அதிக அபராதம் அல்லது பதவிப் பறிப்பு எனக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார் விப 23:8 கையூட்டுப் பெறுவதையும் தவறான தீர்ப்பு எழுதுவதையும் கடவுளுக்கும், ஏழை, எளியவருக்கும் எதிரான குற்றமாகச் சித்தரிக்கிறது. கையூட்டின் காரணமாக நீதித்துறை மோசமான விளைவுகளைச் சந்திப்பதற்கு வாய்ப்புகள் அதிகமாக இருந்தன. எனவேதான்; இணைச்சட்ட விதிகள் நீதிபதிகளும் தலைவர்களும் நீதியுடனும் நேர்மையுடனும் செயல்பட வேண்டும் எனக் கூறுகின்றன. நீதிபதிகள் தலைமைப் பதவியில் இருந்ததால் தங்களுக்கு ஆதரவாக அவர்கள் செயல்பட்டார்கள். கையூட்டுப்பெற்று செல்வந்தர்களாக மாறுவதுஅவர்களுக்கு எளிதாக இருந்தது. இச 16:20 எல்லா மக்களும் மகிழ்ச்சியோடு வாழ்வதற்கு நீதி இன்றியமையாதது என்பதைக் கூறுகிறது. நீதித்துறையில் செய்யப்படுகின்ற குற்றங்கள் எவ்வாறு ஒரு சமூகத்தைச் சீரழித்துவிடும் என்பதை இஸ்ரயேல் அனுபவப்பூர்வமாக அறிந்திருந்தது. நீதித்துறை எவற்றில் எல்லாம் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்கு இச 16:21-17:1 வரையுள்ள இறைச்சொற்றொடர்கள் எடுத்துக்காட்டாக உள்ளன. நீதித்துறை எவ்வாறு செயல்படுகிறது என்பதை இச 17:2-7 வரையுள்ள சொற்றொடர்கள் கூறுகின்றன.

இஸ்ரயேலரின் சமய வழிபாட்டையும் நீதித்துறைதான் கண்காணித்து வந்தது. உதாரணமாக, கானானியரின் சமய வழிபாடுகள் இஸ்ரயேல் மக்களின் வழிபாட்டில் கலந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நீதிபதிகளின் கடமையாக இருந்தது. கானானியர்களின் சமய வழிபாடுகள் கடவுளுக்கு வெறுப்பைத் தருபவை; இஸ்ரயேல் சமூகத்தை அவை அழித்துவிடும். எனவே இஸ்ரயேல் மக்களின் சமய வழிபாடுகளை, குறிப்பாக அவர்கள் பலி செலுத்துவதை நீதிபதிகள் மேற்பார்வையிட வேண்டும். இஸ்ரயேலரின் வழிபாடு முறைப்படியானதாக இருப்பதற்காக இது செய்யப்பட வேண்டும். பலியிடுவதற்குப் பழுதான, தரக்குறைவான விலங்குகளைப் பயன்படுத்துவது வழிபாட்டையே பரிகசிப்பதாகும். மேலும், நீதிதுறை நேர்மையுடன் செயல்படவேண்டும்; அதில் பங்குகொள்பவர் அனைவரும் உண்மையுடனும் நேர்மையுடனும் நடந்துகொள்ள வேண்டும். ஒரு சாட்சியை ஆதாரமாகக் கொண்டு ஒருவரைக் குற்றவாளியாகத் தீர்ப்பிட முடியாது. பொய்சாட்சி சொல்பவர்கள் கடினமானத் தண்டனையைப் பெறவேண்டும். நீதித்துறை நேர்மையுடன் செயல்படுவதற்கு இஸ்ரயேல் மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

அரசர்கள் (17:14-20): இஸ்ரயேலில் முடியாட்சியின் தொடக்கம் மிகவும் சிக்கலானது. பழைய ஏற்பாட்டில் முடியாட்சிக்கு ஆதரவான மரபையும் எதிரான மரபையும் பார்க்கிறோம் (1 சாமு 8-18). முடியாட்சியின் தொடக்கம் பெலிஸ்தியர்களின் அச்சுறுத்தலுடனும், ஒரு மைய அதிகாரத்தின் தேவையுடனும் தொடர்புடையது. இஸ்ரயேல்

மக்கள் அப்போது ஒரு பழங்குடியினர் கூட்டமைப்பாக இருந்தனர். அவர்களைச் சுற்றியிருந்த நாடுகளில் இருந்ததுபோலத் தங்களுக்கும் ஓர் அரசன் வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள் (1 சாமு 8:19-20). இறுதியாக அவர்களுக்கு ஓர் அரசன் கிடைத்தார். இஸ்ரயேலருடைய முடியாட்சியின் தனித்துவம் என்னவென்றால் அரசன் ஆண்டவரின் பிரதிநிதியாகச் செயல்பட்டார். அரசனும் சட்டத்திற்கு உட்பட்டவன்; உடன்படிக்கை இலட்சியங்களுக்கு உட்பட்டு நீதி தவறாமல் ஆட்சி செய்யவேண்டியவன். இஸ்ரயேலின் அரசர்கள் எப்போதுமே கடவுளர்களாகப் பார்க்கப்படவில்லை. விவிலியத்தில் முடியாட்சிபற்றிக் கூறுகின்ற பகுதிகள் எந்த அளவிற்கு வரலாற்றுப்பூர்வமானவை என்பதைக் கணிப்பது கடினம்; ஏனெனில் விவிலியத்தில் வரலாற்றைவிட இறையியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் பண்டைய மனிதர்கள் வரலாற்றை நாம் இன்று புரிந்து கொண்டிருப்பதுபோல புரிந்து கொள்ளவில்லை.


வரலாற்றுப் பதிவுகளை ஆய்வு செய்கையில் அரசனுக்கென்று சில சிறப்புரிமைகள் இருப்பதைக் காணமுடிகிறது உதாரணமாக, குதிரைகள், பல மனைவியர் (17:16-17)போன்றவற்றைக் கூறலாம். இந்த சிறப்புரிமைகள் உருவகங்களாகக் கூறப்பட்டிருக்கின்றன. குதிரைகள் எல்லாக் காலத்திலும் உயர் வகுப்பினரோடு தொடர்புடையவை. அவர்களால்மட்டுமே அவைகளைப் பராமரித்து பாதுகாக்க முடியும். பெலிஸ்தியர்கள் தேர்களையும் குதிரைகளையும் கொண்டவர்களாக இருந்தார்கள். எனவேதான் அவர்கள் இஸ்ரயேலருக்குப் பெரிய அச்சுறுத்தாலாக விளங்கினார்கள். மேலும் குதிரைகள் இராணுவ வலிமையையும் மனிதர்களின் தற்பெருமையையும் சுட்டிக்காட்டுவதாகவும் இருந்தன. இணைச்சட்டம் ஆண்டவரைச் சார்ந்து, அவரில் நம்பிக்கைக் கொண்டு செயல்படுவதை வலியுறுத்திக் கூறுகிறது. குதிரைகளும் தேர்களும் இஸ்ரயேலின் கடவுளுக்குமுன் ஒன்றுமில்லை (திபா 20:8; 33:16-19; 76:7-8; 147:10; எசா 43:16-17; எசேக் 26:7)என்பதை விவிலியம் பல இடங்களில் பதிவுசெய்கிறது. அரசர்கள் பல மனைவியரையும் வைப்பாட்டியர்களையும் கொண்டிருப்பதும் வழக்கமாக இருந்தது. தாவீதின் மகனான அப்சலோம் தனது தந்தையின் வைப்பாட்டியர்களுடன் இஸ்ரயேலில் அனைவரும் அறிய உறவு கொண்டான் என 2 சாமு 16:20-22 இல் வாசிக்கிறோம். அப்சலோமின் இச்செயல் அவனது தந்தையான தாவீதின் அரியணையை அவன் அபகரித்துக்கொள்வதற்கு அடையாளமாகக் கூறப்படுகிறது.

லேவியர்களும் குருக்களும் (18:1-8). இஸ்ரயேலில் குருத்துவத்தின் வரலாறும் சிக்கலானது. பொதுவாக மதங்கள் குருத்துவப் பணியை மனிதர்களுக்கும் கடவுளுக்கும் நடுநிலையாளர்களாக நின்று செய்யும் பணியாகப் பார்க்கின்றன. இணைச்சட்ட நூலில் லேவியர்கள் சொத்துரிமை இல்லாதவர்களாக, பிறருடைய இரக்கத்தில் அவர்களைச் சார்ந்து வாழ்பவர்களாகச் சித்தரிக்கப்படுகிறார்கள். இதன் வரலாற்றுப் பின்புலம் எதுவென இங்கே விளக்குவது கடினம். இணைச்சட்ட ஆசிரியர்கள் குருத்துவ உரிமைகளைப் பற்றிப் பேசுவதற்குக் காரணங்களுண்டு. இணைச்சட்ட ஆசிரியர்கள் இந்நூலை தொழுகை மேடுகள் அனைத்தும் ஒழிக்கப்பட்டு வழிபாடு எருசலேமில்; மையப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் எழுதுகிறார்கள். எல்லாக் குருக்களும் எருசலேம் கோவிலில் பணிசெய்வது முடியாத ஒன்று; இந்தச் சூழ்நிலையில் குருக்கள் பராமரிக்கப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் குருத்துவ உரிமைகளைப் பேசுகிறார்கள் என நினைக்க இடமிருக்கிறது. இணைச்சட்ட நூலில் லேவியர், குருக்கள் முக்கியத்துவம் பெறுகிறார்கள். லேவியர்கள் ஒரு நிலையான மதிப்பீட்டையும் வெளிப்படுத்துகிறார்கள். அடுத்தவர்களின் உதவியுடன் செயல்படுவது சமூகத்திற்கு ஒரு பெரியசுமையாக இருக்காது; ஆனால் ஒருவர் வெளியுலகச் சுமைகள் எதுவுமில்லாமல் சமூகத்திற்காக முழுநேரமும் உழைப்பதற்கு அவர் சுதந்திரமாகச் செயல்பட வேண்டிய

அவசியம் இருக்கிறது. எல்லாக் காலத்திலும் கண்ணியமான பணியைச் செய்வதற்குப் பொருளாதாரத் தன்னிறைவு ஒரு காரணியாக இருக்க முடியாது. உதவி செய்பவர்கள் தங்கள் வசதிக்கேற்றவாறு அதிகமாகவோ, குறைவாகவே கொடுப்பார்கள். இத்தகைய சேவையின் மையமாக அவர் கடவுளைச் சார்ந்து வாழ்வது உள்ளது (காண் லூக்கா 12:22-34).

இறைவாக்கினர்கள் (18:9-22): இணைச்சட்ட விதிகள் உண்மையான இறைவாக்குரைத்தலைத் தெளிவுபடுத்துகின்றன. இச 13:1-6 இல் போலி இறைவாக்கினர்கள் பற்றிய எச்சரிக்கை கொடுக்கப்படுகிறது. இச 18 இல் இறைவாக்கினர்கள் பற்றிக் கூறுகின்ற பகுதியை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை முறையே 18:9-14 மற்றும் 18:15-22. மோசே இறைவாக்கினர்களில் எடுத்துக்காட்டானவராகச் சித்தரிக்கப்படுகிறார். மோசே இஸ்ரயேல் மக்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த தலைவர்; அதுமட்டுமல்ல அவரை மக்களின் மீட்பராக, குருவாக, நீதிபதியாக, எளிமைக்கு எடுத்துகாட்டாக, கடவுளோடு நெருங்கிய உறவு கொண்டவராக விவிலியம் சித்தரிக்கிறது. ஆண்டவரின் வார்த்தைகளை அவர் பேசுகிறார்; மக்கள் அவருக்குக் கீழ்ப்படிகின்றனர். பழைய ஏற்பாட்டில் இறைவாக்குரைத்தல் என்பது கடவுளின் வார்த்தையை எடுத்துரைப்பதும் மக்களை உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கச் செய்வதுமாகும். இறைவாக்கினர்களின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவது அமைதியையும் வளமையான வாழ்வையும் கொண்டு வந்தது. கீழ்ப்படியாமை அழிவைக் கொண்டுவந்தது. கீழ்ப்படியாமையின் காரணமாகப் பல நேரங்களிலும் பிற இனப்பகைவர்கள் இஸ்ரயேலுக்கு எதிராகப் படையெடுக்க அனுமதிக்கப்பட்டனர்.

பயணம் தொடரும்,
அருட்பணி ஆ. அலெக்ஸ் cmf






அருட்தந்தை.ஜஸ்டின் சேவியர் ராஜ்

திருக்குடும்ப ஆலயம், பெருந்துறை, கோவை மறைமாவட்டம்


**பொதுக்காலம் 34ம் வாரம் ஞாயிறு - 26.11.2023**

## இயேசு கிறிஸ்து அனைத்துலாக அரசர் - பெருவிழா

எசேக்கியேல் 34/11-12, 15, 17, 1 கொரிந்தியர் 15/20-26, 28 - மத்தேயு 25/31-46

1906ம் ஆண்டு தேர்தல் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆங்கிலேயர் ஹில்லரி பெல்லக் என்பவர் தேர்தலில் போட்டார். அன்பார்ந்தவர்களே நான் ஒரு கத்தோலிக்கர். என்னால் முடிந்த அளவு தினசரித் திருப்பலிக்குச் செல்கின்றேன். இது என்னுடைய ஜெபமாலை, என்னால் முடிந்தவரை முழந்தாளிட்டு ஜெபிக்கின்றேன். மதத்தைக் காரணம்காட்டி என்னைப் புறக்கணித்தீர்கள் என்றால் தன்மானமில்லாத உங்கள் பிரதிநிதியாக இருப்பதிலிருந்து என்னைக் காத்த இறைவனுக்கு நன்றி சொல்கிறேன்.

கடவுளை முன்னிலைப்படுத்திய அவர் அளப்பரிய வாக்குகள் பெற்று 1906 முதல் 1910 முடிய பதவியில் இருந்தார். கடவுளையும் அவரது இராஜ்ஜியத்தையும் முதலில் தேடுங்கள் மற்றவை அனைத்தும் சேர்த்துக் கொடுக்கப்படும் என்பதற்கு இவர் தலைசிறந்த உதாரணம்.

இறை இயேசுவில் பிரியமானவர்களே, திருவழிபாட்டு ஆண்டின் இறுதி ஞாயிற்றுக்கிழமையை தாய்த் திருச்சபை கிறிஸ்துவுக்கு அர்ப்பணமாக்கி கிறிஸ்துவே அரசர் என்ற விழாவைச் சிறப்பிக்கின்றது. அடுத்த ஞாயிறு நாம் திருவழிபாட்டு 2ம் ஆண்டின் திர வருகைக் காலத்தைத் தொடங்குகிறோம். சமூபத்தில் இயேசுவின் டத்திற்குக் கீழ் பின்வரும் வசனம் எழுதப்பட்ட் ஒன்றைப் பார்த்தேன். **No matter who is elected President, Jesus Christ is still the king of everything...**அதாவது ஜனாதிபதியாக யார் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், கிறிஸ்துதான் எல்லாவற்றிற்கும் அதிபர் என்பது அதன் பொருள்.

வரலாறு நமக்குத் தெரியும். அடிமைத்தனத்திலிருந்து அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்து கடவுள் இஸ்ரயேல் மக்களை விடுவித்துப் பாலும், தேனும் பொழியும் கானான் தேசத்திற்கு அழைத்து வந்தார். நாட்டில் குடியேறியபிறகு அருகிலிருந்த மற்ற நாட்டு அரசர்களைப்போலவே தங்களுக்கும் ஓர் அரசன் வேண்டும்

என்று அடம் பிடித்தனர். பிள்ளைகள் அடம் பிடிக்கும்போது, அழிப்பது பேய்க் குணம், அளிப்பது தாய்க்குணம். தாய் உள்ளத்தோடு சவுல் என்னும் அரசனை அவர்களுக்குக் கடவுள் கொடுத்தார்.

பணமும், பதவியும் எந்த மனிதனையும் மாற்றிவடும் என்பது எழுதப்படாத சட்டம். மன்னர்கள் பாதை மாறினர். மக்களை மறந்தனர். ஆதாயத்தை மட்டும் தேடினர். தங்களை நேசிக்க, வழிநடத்த யாரும் இல்லையா? என்று ஏங்கிக் கொண்டிருந்த நிலையில்தான் கடவுள் இறைவாக்கினர் வழியாக நம்பிக்கை தருகின்றார. தாவீதின் மரபிலே மக்கள் விரும்புகிற மீட்பர், மெசியா, அரசர் வருவார் என்ற உறுதிப்பாட்டைத் தருகிறார். தாவீதின் மரபிலே இயேசு தோன்றினார்.

காலம் நிறைவேறிற்று, இறையாட்சி நெருங்கிவிட்டது என்று இயேசு தன் பணியைத் துவக்கினார். பதவிக்காகப் பித்துப்பிடித்து அலைந்து கொண்டிருந்த காலத்தில் இயேசு இறையரசின் தன்மைகளை தெளிவுபடுத்தினார்.

1. விதைப்பவர் உவமை (மத் 13/13-23)
2.கடுகவிதை (மத் 13/31-32)
3.முளைக்கும் விதை (மாற் 4/26-29)



4.கோதுமை மற்றும் களைகள் உவமை ( மத் 13/12)
5.விலையுயர்ந்த முத்து (மத் 13/45-46)
6.மன்னிக்காத ஊழியன் (மத் 18/23-35)
7.திராட்சைத் தோட்டப்பணியாளர்கள் ( மத் 20/2-16)
8.திருமண விருந்து (மத் 22/2-14)
9.ஊதாரி மகன் (லூக் 15/11-30)

இந்த உவமைகள் வழியாக, இறையரசின் தன்மையையும், தகுதியையம் புலப்படுத்தினார். இலஞ்சம் அதிகம் கொடுப்பது தகுதியின் அடிப்படை என்ற சூழ்நிலைக்கு மத்தியில், என்னைப் பின்பற்றிவர விரும்புபவர்கள், தன்னையே மறந்து தன் சிலுமையைச் சுமந்துகொண்டு என்னைப் பின்பற்றட்டும்என்று சொல்லி, தியாகம் செய்வதுதான் அதிகாரத்திற்கு அழகும், அர்த்தமும் என்று கற்பித்தார்.

திருமுழுக்கு பெற்றபோது நாம் இறையரசை விரும்பி ஏற்றிருக்கிறோம். பதவியில் இருப்பது தகுதியல்ல, மாறாக சிறுகுழந்தை மனநிலைக்கு மாறாவிடில், அடிப்படைத் தகுதியே பறிக்கப்பட்டுவிடும் என்று எச்சரிக்கிறார். இறையரசில் குழந்தைபோல இருப்பது உயர்ந்தது. இறையரசின் பலவீனம் பலத்தை வெல்கிறது. மடமை ஞானத்தை வெல்கிறது. ஊசயின் காதில் ஒட்டகம் நுறைகிறது. அன்பே அடிப்படைச் சட்டமாகிறது.

திருத்தந்தை 11ம் பத்திநாதர் 1925ம் ஆண்டு கிறிஸ்துவை அரசராகக் காண்பித்து, அழிப்பதில் அல்ல, மாறாக அன்பு செய்வதில்தான் ஒருவரின் திறன், வலிமை அடங்கியுள்ளது என்பதை நிலைநாட்டினார்.

நாம் அன்பு செய்து கிறிஸ்து அரசரின் அரசாட்சியில் குடிமக்களாவோம். ஆமென்.



# கிறிஸ்து அரசர் பெருவிழா

எசே. 34 : 11-12, 15-17

1கொரி. 15 : 20-26, 28 மத். 25 : 31-46

26-11-2023



பா. சேவியர்
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

தந்தையாம் கடவுளிடம் ஆசி பெற்ற அன்பு இறைமக்களே, உங்கள் அனைவரையும் திரு வழிபாட்டு ஆண்டின் சிகரமான கிறிஸ்து அரசர் பெருவிழா வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இந்த உலகில் வளங்களைச் சுரண்டுவதற்காக நாடுகளை வென்ற அரசர்கள் உண்டு. இந்த உலகம் தன்னைப் போற்ற வேண்டும் என்பதற்காக வென்ற மன்னர்கள் உண்டு. அடுத்தவரை அடிமையாக்கி மகிழ்வதற்காக வென்ற ராஜாக்கள் உண்டு. ஆனால் இவர்களும் இவர்களது அரசும் நிலைத்ததே இல்லை.

ஆனால், அன்பு என்ற ஆயுதத்தைக் கொண்டு உலக மக்களின் இதயங்களை வென்று, பாவத்தின் அடிமை விலங்கொடித்து அவர்களை மீட்ட ஒரே அரசர் நம் கிறிஸ்து அரசர் மட்டுமே. அவர் நேற்றும் இன்றும் என்றும் உலக மக்களின் மனங்களிலே அமர்ந்து ஆட்சி செய்துகொண்டு வருகிறார். அவரது அரசுக்கு முடிவே இராது.

ஏழை எளியவருக்கு இரக்கம் காட்டுதல், துன்பத்தில் இருப்போருக்கு துணையாய் இருத்தல், அநீதிக்கு எதிராகக் குரல் கொடுத்தல், தன்னலம் தவிர்த்து பொது நலத்துடன் வாழ்தல் போன்ற நற்பண்புகளை நமதாக்கி வாழும்போதுதான் கிறிஸ்து அரசரின் ராஜியத்தில் நாம் குடியுரிமைப் பெற முடியும் என்பதை இன்றைய வழிபாடு சுட்டிக் காட்டுகின்றது.

நல்லாயனாகிய இயேசுவிடம் நாம் பெறுகின்ற அருளையும் அன்பையும், பரிவையும் பாசத்தையும், நீதியையும் நேர்மையையும் அடுத்தவருக்கு பகிர்ந்தளிக்கிறோமா? அந்த அருங்கொடைகளைச் சரியாகப் பயன்படுத்தி அடுத்தவருக்குச் செய்தது என்ன? என்று இறுதி நாளில் கடவுள் நம்மை நோக்கிக் கேட்கும் கேள்விக்கு நமது பதில் என்ன? என்பது குறித்து இன்றைய வழிபாட்டின் வழியாகச் சிந்திப்போம்.

கிறிஸ்துவே நமது அரசர் என்பதை உளப்பூர்வமாக ஏற்று, அவரைப் போன்றே இல்லாதவருக்கும் இயலாதவருக்கும் உதவி செய்பவர்களாக வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

கிறிஸ்து அரசர் பெருவிழாவான இன்று, ஆண்டவரை நல்லாயனாகக் காட்டும் வாசகம் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து அருளப்பட்டுள்ளது. ஆண்டவராகிய இறைவன் ஆயனாக உருவெடுத்து அவரது ஆட்டுக்குட்டிகளாகிய நம்மை எப்படித் தேடிவந்து பாதுகாக்கிறார் என்பதை விளக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

சாவின்மேல் கொண்ட வெற்றியின் மூலம் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வோரும் அவரோடு அரசுரிமைப் பெறுவார்கள் என்பதை இன்றைய இரண்டாம் வாசகம் எடுத்துரைக்கிறது. கிறிஸ்துவின் உயிர்ப்பிலே ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ள நாமும் அவரோடு ஒருநாள் உயிரோடு எழுப்பப்படுவோம் என்ற நம்பிக்கையுடன் இவ்வாசகத்தைக் கேட்போம்.


## மன்றாட்டுகள்

1) மந்தையை மேய்த்து, பராமரித்துக் காக்கின்ற நல்லாயனே இறைவா, தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களைத் தெளிந்த நீரோடைக்கும் பசும்புல் மேய்ச்சலுக்கும் அழைத்துச் செல்லும் உன்னதப் பணிகளில் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவரும் உமது வார்த்தைக்கேற்ப இறைமக்களை நல்வழியில் நடத்திச் செல்லத் தேவையான அருளையும் ஆற்றலையும் அவர்களுக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2) அனைத்திலும் அனைத்துமாய் இருக்கின்ற இறைவா, எமது இந்திய தேசத்தை ஆளுகின்ற தலைவர்களும் அதிகாரிகளும் சுயநலமில்லாதவர்களாய், வேற்றுமையில் ஒற்றுமை காணும் பண்பாடு கொண்டவர்களாய், சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் பேணுபவர்களாய், நல்லாட்சி புரிபவர்களாய் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3) அரசருக்கெல்லாம் அரசராகிய இறைவா, உம் திருமகனாகிய இயேசுவை ஏற்றுக்கொண்டுள்ள நாங்கள் அவதிப்படுவோருக்கு ஆறுதலாக, நோயுற்றோருக்கு மருந்தாக, உள்ளம் உடைந்தவருக்கு உறுதுணையாக, வாழ்க்கையைத் தொலைத்தவருக்கு தோழனாக இருந்து வாழவும், இயேசுவின் தலைமைப் பண்புகளாகிய அன்பையும் பகிர்வையும் வாழ்வாக்கி வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) அன்பும் பரிவும் கொண்ட தந்தையே இறைவா, கிறிஸ்து அரசரின் பண்புகளான அன்பு, நீதி, உண்மை, மன்னிப்பு, கருணை, இரக்கம் போன்றவைகளை எங்கள் வாழ்வில் கடைப்பிடித்து வாழவும், அவரது அன்பின் ஆட்சியில் பங்குகொண்டு அவர் வழங்கும் நீதி, இரக்கம், அன்பு ஆகியவற்றை நிறைவாய்ப் பெற்று மகிழவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



# பொன் மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

தாழ்வு மனப்பான்மையே ஒருவர் தனக்கே செய்யும்
பாவமும், குற்றமுமாகும். – விவேகானந்தர்

கோபக்காரர்கள், மனதில் பட்டதைப் பேசுவார்கள்
பொய்பேசி நடிக்கமாட்டார்கள்.
உண்மையில் நல்லவர்கள், ஆனால் மற்றவர் பார்வையில்  கெட்டவர்கள்

தனக்கென்று எதையும் உரிமை கொண்டாடாமலிருப்பதும்
எதற்கும் ஆசைப்படாமலிருப்பதும் எளிமையின் முதல்விதி. – ரூமி

மாற்றமே மாற்றமில்லாதது. மாறாதது இறக்கும். – ஜார்ஜ் பெர்னாட்ஷா

கோபத்தினால் தீர்ந்த போர்களில்லை
பழிவாங்களால் தீர்க்கப்பட்ட பகையில்லை

வாழ்வின் மகிழ்ச்சி, தரமான எண்ணத்தைப் பொறுத்தது.
–மார்க்கஸ் அவ்ரேலியுஸ்

பகைக்கும் உலகை கட்டுப்படுத்த முடியாது, ஆனால்
பகைக்கான நம் எதிர்வினையை நாம் கட்டுப்படுத்த முடியும்.
நம் மகிழ்ச்சியே நம் இலக்காகட்டும்.

சுமை ஒன்றுதான், ஆனால் சுமக்கும் விதம்தான் வேறுவேறு.

இன்றைய உலகில் சரியாய் இருப்பவன் அவஸ்தைப்படுகிறான்
நரியாய் இருப்பவன் சந்தோஷத்தை அனுபவிக்கின்றான்

# சங்க இலக்கியச் சுவை



திருமதி.வீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியை

**இன்று கலித்தொகையிலிருந்து ஒரு பாடலைக் காண்போம்.**

கலித்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இது கலிப்பா என்னும் பாவகையால் ஆன நூல். 150 பாடல்களைக் கொண்டது. அதில் பாடறிந்து ஒழுகுதல் என்ற பாடலை இன்று நாம் பார்ப்போம்.

அன்பு, அறிவு, பண்பு போன்றவை ஒவ்வொரு மனிதனும் வளர்த்துக் கொள்ள வேண்டிய உயர்குணங்களாகும். இச்சொற்களின் பொருளை மேலோட்டமாக அனைவரும் அறிவர். ஆனால் இவை ஒவ்வொன்றுக்கும் நுட்பமான பொருள் உண்டு. அதனை விளக்கும் கலித்தொகை பாடலின் ஆசிரியர் நல்லந்துவனார்.

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்.

போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை

பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்

அன்பு எனப்படுவது தன் கிளை செறாஅமை

அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்

செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை

நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை

முறை எனப்படுவது கண்ஓடாது உயிர் வௌவல்
பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்.

பாடலின் பொருள்:

1.இல்வாழ்வு என்பது வறியவர்களுக்கு உதவி செய்தல்:

2.பாதுகாத்தல் என்பது அன்புடையோரை பிரியாது வாழ்தல்;

3.பண்பு எனப்படுவது சான்றோர் காட்டிய வழியில் நடத்தல்;

4.அன்பு எனப்படுவது உறவினர்களோடு வெறுப்பின்றி வாழ்த்தல்;

5.அறிவு எனப்படுவது அறிவற்றவர் கூறும் சொற்களை பொறுத்தல்;

6.செறிவு எனப்படுவது முன் சொன்ன வாக்கை மறுக்காமல் காப்பாற்றுதல்;

7.நிறை எனப்படுவது மறைப்பொருளை பிறர் அறியாமல் காத்தல்:

8.நீதி முறை எனப்படுவது குற்றம் செய்தவருக்கு உரிய தண்டனை வழங்குதல்;

9.பொறுமை எனப்படுவது தம்மை இகழ்வாரையும் பொறுத்தல்.

நாம் ஒவ்வொருவரும் இத்தகைய பண்பு நலன்களை பின்பற்றி வாழ வேண்டும் என்று கூறுகிறது இந்தப் பாடல்.

தன்னைப் போல் பிறரையும் நேசி என்பது நம் ஆண்டவர் நமக்கு கொடுத்த கட்டளை.

முயற்சிப்போம்.

சாட்சிகள் ஆவோம்.

இயேசுவுக்கே மகிமை.

லீமா விக்டோரியா.
தமிழ் ஆசிரியை.

# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

## குறள் 71

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புண்கணீர் பூசல் தரும்



### குறள் விளக்கம்

அன்புக்கும் அடைத்து வைக்கும் தாழ் உண்டோ? அன்புடையவரின் சிறு கண்ணீரே உள்ளே இருக்கும் அன்பைப் பலரும் அறிய வெளிப்படுத்திவிடும்.

### சிந்தனை

ஒரு சிறுவன் இறந்துகிடக்கிறான்,அவன் நீலநிற கால்சட்டையும் வெள்ளைநிற மேல்சட்டையும் அணிந்திருக்கிறான், என்று கேள்விபட்டதும் பெண்ணொருத்தி அழுது அலறியவண்ணம் தெருவழியாக அழுதுகொண்டே ஓடுகிறாள். அங்கே வேறொரு பெண் இறந்த சிறுவனின் உடலைப் பார்த்து கதறி அழுதுகொண்டே அருகில் அமர்ந்திருந்ததைக் கண்டதும் அந்தப் பெண்ணின் மகன்தான் இறந்திருக்கிறான் என்று எண்ணி, இவள் தனது கண்ணீரைத் துடைத்துவிட்டு, இறந்த சிறுவனின் முகத்தைக்கூடப் பார்க்காமால் திரும்புகிறாள். அவளுக்குப் பின்னால் அங்கே அழுதுகொண்டிருந்த பெண்ணை அவள் கணவன் பிடித்து இழுத்து வந்துகொண்டிருந்தான். இவள் குழந்தைதானே இறந்தது என்று கேட்டவளிடம். ‘இல்லை, இவளுக்குக் குழந்தை இல்லை. எனவே எந்தக் குழந்தை இறந்;தாலும் இவள் இப்படிதான் அழுவாள் என்றார்கள். பின் இறந்த குழந்தை தன் குழந்தையாக இருக்குமோ? என்று எண்ணி அந்த இடத்தை நோக்கி நகர்கிறாள். அங்கு இறந்து கிடந்தது அவள் குழந்தைதான்.

அன்பையும் காதலையும் மறைத்துவைக்க முடியாது என்பர். ஆம்! தன் குழந்தை இறந்துவிட்டான் என்றதும் தலைதெறிக்க வழிநெடுக அழுதுகொண்டே செல்கிறாள் ஒரு தாய். மற்றொருவள் தனக்குக் குகுழந்தை இல்லையே என்றெண்ணி இல்லாத குழந்தைக்காக அழுகிறாள். அன்பில் உயர்ந்தது தாயன்பு என்பர். எல்லா இறப்புகளிலும் நம் கண்கள் கண்ணீர் உதிர்ப்பதில்லை. நாம் அன்பு செய்தவர்கள் இறக்கும்போதுதான் நம் கண்களில் இயல்பாக கண்ணீர் வரும். சினிமாவைப் பார்க்கும்போதுகூட சில வேளைகளில் கண்ணீர் வரும். அதற்கும் நம் வாழ்வுக்கும் ஒப்பு இருப்பதால். ஆனால் சில வருந்தத்தக்க நிகழ்வுகளை நேரில் பார்த்தாலும்கூட கண்ணீர் வருவதில்லை. ஏனெனில் அதற்கும் நம் வாழ்வுக்கும் ஒப்பு இல்லாததால்.

வேதாகமத்தில் தாவீதுக்கும் உரியாவின் மனைவிக்கும் பிறந்த மகன் அப்சலோம் இறந்தபோது, தாமிது அரசர் புலம்பி அழுதார். அப்போது அவர் அதிர்ச்சியுற்று, என் மகன் அப்சலோமே! என் மகனே! என் மகன் அப்சலோமே! உனக்குப்பதில் நான் இறந்திருக்கலாமே? அப்சலோமே! என் மகனே என்று கதறிக் கொண்டே அவர் வாயிலின் மாடியறைக்குச் சென்றார். அரசர் தம் மகனுக்காக அழுது புலம்புவதாக யோவாபுக்கு அறிவிக்கப்பட்டது 2சாமு 18:33, 19:1.

ஆம்! அன்பு உள்ள இடத்தில்தான் கண்ணீர் வரும்.



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm






கடந்த பல வாரங்களாக, நலம் தரும் இயற்கை வளம் என்ற தலைப்பில், மிக உன்னதமான நலம்தரும் நற்செய்திகளை அற்புதமான தமிழில் வழங்கி வந்த உயர்திரு.அம்புரோஸ் அவர்களுக்கு, ஞான ஒலி இணைய வாசக அன்பர்கள் சார்பாகவும், டிவையின் விஸ்டம் மினிஸ்ட்ரீஸின் சார்பாகவும் எங்களது மனம் நிறைந்த நன்றிகளை அவருக்கு சமர்ப்பிக்கின்றோம்.

அவரின் தமிழ்த் தொண்டும், மருத்துவப் பணியும், சமூகப் பணியும் சிறப்படைய அனைவரின் சார்பாக வாழ்த்துகின்றோம். உங்கள் அனைவரையும் இந்த கருத்துக்காக இறைவனிடம் செபிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். நன்றி.